<u>செய்தி வெளியீடு</u>

செ.வெ. எண். 22 நாள். 18.12.2017

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.கா.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, இராணி மேரி கல்லூரியில் அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.கா.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் இன்று (18.12.2017) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, 21.12.2017 அன்று வாக்குப்பதிவு நிறைவு பெற்றவுடன் கட்டுப்பாட்டுக் கருவி மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் இராணி மேரி கல்லூரி பாதுகாப்பு அறையில் வைக்கப்படும். இவை 24 மணி நேரமும் காவல்துறை பாதுகாப்புடன் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். இதனைத் தொடர்ந்து 24.12.2017 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இம்மையங்களில் செய்யப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வாக்கு எண்ணும் மையம், வாக்குப்பெட்டிகள் வைக்கும் பாதுகாப்பு அறை, ஊடக மையம், வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கு எண்ணிக்கை பார்வையிடுவதற்கு தேவையான தடுப்பு வேலிகள், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், வாக்கு எண்ணும் மையத்திற்கு வேட்பாளர்களின் முகவர்கள் அனுமதிக்கப்படும் விதம், அவர்களுக்கு வழங்க வேண்டிய அடையாள அட்டை, வாகன நிறுத்தம், அரசு அலுவலர்கள் செல்லும் பாதை, வாக்கு எண்ணும் மையத்திற்கு பாதுகாப்பு அறையிலிருந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை கொண்டு வருவது குறித்தும், வாக்கு எண்ணிக்கை நிறைவு பெற்றவுடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறைக்கு மீண்டும் பாதுகாப்புடன் கொண்டு செல்வது குறித்தும், வாக்கு எண்ணிக்கை முழுவதனையும் வீடியோ ஒளிப்பதிவு செய்வது குறித்தும் ஆலோசனை வழங்கப்பட்டது.

ஆய்விற்குப்பின் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.கா.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தெரிவிக்கையில், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தலை நியாயமாகவும்,

சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தலை கண்காணித்திட 75 பறக்கும் படைகளும், 21 நிலைக்கண்காணிப்புக் குழுவினரும், 20 வீடியோ கண்காணிப்புக் குழுவினரும், ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி எல்லையில் 45 சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். வாக்குச்சீட்டு வழங்கும் பணி தற்பொழுது 85 சதவீதம் நிறைவடைந்துள்ளது. வாக்குச்சீட்டினை பெறாதவர்கள் வாக்குப்பதிவு அன்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் பெற்று வாக்களிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல் நன்னடத்தை விதிகளின்படி, 48 மணிநேரத்திற்கு முன்பாக அனைத்து கட்சியினரும் பிரச்சாரத்தினை நிறுத்த வேண்டும். அதன்பின்பு ஆர்.கே.நகர் அல்லாத பிற தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வாக்கு எண்ணிக்கையின் போது 14 இருக்கை அமைத்து 19 சுற்றுகளில் வாக்குகளை எண்ண திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழக காவல்துறையினரும் மத்திய பாதுகாப்பு படையினருடன் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 22 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஆவணங்கள் இன்றி வைத்திருந்த ரூ.30.4 இலட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை சுமூகமாக நடைபெற அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., மாவட்ட கூடுதல் தேர்தல் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.பிரியதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**